## இயல் - 3 - அறிவியல் ஆத்திச்சூடி

**வகுப்பு : VI**

**பாடம் : தமிழ்**

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. உடல் நோய்க்கு __________ தேவை.

   **அ) ஔடதம்** ஆ) இனிப்பு இ) உணவு ஈ) உடை

2. நண்பர்களுடன் ___________ விளையாடு.

   **அ) ஒருமித்து** ஆ) மாறுபட்டு இ) தனித்து ஈ) பகைத்து

3. கண்டறி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____

   அ) கண் + அறி **ஆ) கண்டு + அறி** இ) கண்ட + அறி ஈ) கண் + டற

4. ஓய்வற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_______

   **அ) ஓய்வு + அற** ஆ) ஓய் + அற இ) ஓய் + வற ஈ) ஓய்வு + வற

5. ஏன் + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது_______

   அ) ஏன்என்று **ஆ) ஏனென்று** இ) ஏன்னென்று ஈ)ஏனன்று

6. ஔடதம் + ஆம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது________

   **அ) ஔடதமாம்** ஆ) ஔடதம்ஆம் இ) ஔடதாம் ஈ) ஔடதஆம

### ஆ. எதிர்ச்சொற்களைப் பொருத்துக.

அணுகு x **விலகு**

ஐயம் x **தெளிவு**

AAMSKOSAVAPATTY

ஊக்கம் x **சோர்வு**

உண்மை x **பொய்மை**

## இ. பாடல் வரிகளுக்கேற்றவாறு முறைப்படுத்துக.

1. சிந்தனை கொள் அறிவியல் - **அறிவியல் சிந்தனை கொள்**
2. சொல் தெளிந்து ஐயம் - **ஐயம் தெளிந்து சொல்**
3. கேள் ஏன் என்று - **ஏன் என்று கேள்**
4. வெல்லும் என்றும் அறிவியலே - **அறிவியலே என்றும் வெல்லும்**

## ஈ. குறுவினா

**1. மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?**

மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது அறிவியல்.

## உ. சிறுவினா

**1. பாடலின் கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.**

- எப்போதும் அறிவியல் சிந்தனை கொள்ளுதல் வேண்டும். ஆராய்ச்சியில் மூழ்க வேண்டும்.
- எந்த அறிவியற் கருத்தையும் இயன்ற வரை புரிந்து கொள்ள வேண்டும். அறிவியல் ஆய்வு செய்யும் போது ஈடுபாடு நிரம்பி இருத்தல் வேண்டும்.
- அறிவியலே வெல்லும். ஏன் என்னும் வினாவே அறிவியல் பெட்டியின் திறவுகோல். எதையும் சந்தேகம் இல்லாமல் தெளிந்து கூற வேண்டும். ஒன்று கூடி செயல்பட வேண்டும்.

KOSAVAPATY

- ஓய்வு இல்லாமல் உழைக்க வேண்டும். ஆய்வினால் அடையும் அனுபவமே அடுத்த சோதனைகளின் போது ஏற்படும் ஐயங்களுக்கு மருந்தாக அமையும்.

## ஊ. சிந்தனை வினா

**1. உங்களுக்குத் தெரிந்த மருத்துவ முறைகள் யாவை?**

1. அலோபதி:

ஆங்கில முறை மருத்துவம்

2. ஹோமியோபதி:

நோய் உண்டாக்கும் காரணிகளை நீர்த்துப் போகச் செய்த பின் நோயாளிகளுக்கு மருந்து தரும் முறை.

3. சித்த மருத்துவம் :

சித்தர்கள் கண்ட மூலிகை மருத்துவம்.

4. ஆயுர்வேதம் :

இயற்கை முறை மருத்துவம்.

5. யுனானி :

இஸ்லாமியரின் இயற்கை முறை மருத்துவம்.

6. அக்குபஞ்சர்:

சீன முறை மருத்துவம் (தொடு சிகிச்சை)

## அறிவியலால் ஆள்வோம்

## அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அவன் எப்போதும் உண்மையையே ______________.

**அ) உரைக்கின்றான்** ஆ) உழைக்கின்றான்

இ) உறைகின்றான் ஈ) உரைகின்றான்

AAI TY

2. ஆழக்கடல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) ஆழமான + கடல் ஆ) ஆழ் + கடல்

இ) ஆழ + கடல் **ஈ) ஆழம் + கடல்**

3. விண்வெளி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) விண் + வளி **ஆ) விண் + வெளி**

இ) விண் + ஒளி ஈ) விண் + வொளி

4. நீலம் + வான் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

அ) நீலம்வான் ஆ) நீளம்வான்

**இ) நீலவான்** ஈ) நீலவ்வான்

5. இல்லாது + இயங்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

அ) இல்லாதுஇயங்கும் ஆ) இல்லாஇயங்கும்

**இ) இல்லாதியங்கும்** ஈ) இல்லதியங்கும்

**ஆ. நயம் அறிக.**

1. பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எழுதுக.

**ஆ**ழக் - **ஆ**ய்வுகள்

**எ**லும்பும் - **எ**ந்திரம்

**செ**யற்கை - **செ**ய்தி

2. பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எழுதுக.

நீ**ல** - நி**ல**வில்

செ**ய**ற்கை - இ**ய**ற்கை

3. பாடலில் இடம்பெற்றுள்ள இயைபுச் சொற்களை எழுதுக.

AMSKOSAVAPATTY

பார்க்கின்றான், நினைக்கின்றான், உரைக்கின்றான்,

படைக்கின்றான், காக்கின்றான், சிறக்கின்றான்.

## இ. குறுவினாக்கள்

**1. செயற்கைக்கோள் எவற்றுக்கு எல்லாம் பயன்படுகிறது?**

செயற்கைக்கோள் செய்தித் தொடர்புக்குப் பயன்படுகிறது. இயற்கை வளம் எங்கே இருக்கிறது? புயல் எப்பக்கம் வருகிறது? மழை எப்பொழுது வரும்? என்னும் வினாக்களுக்கு செயற்கைக்கோள் மூலம் விடைகள் கிடைக்கின்றன.

**2. நாளைய மனிதனின் வாழ்வு எவ்வாறு இருக்கும்?**

நாளைய மனிதன் வேறுவேறு கோள்களின் எல்லாம் நகரங்கள் அமைத்து வாழ்வான். காலை.மாலை, இரவு, பகல் என வேளை தோன்றும் ஒவ்வொரு கோள்களுக்குச் சென்று திரும்ப விண்வெளிப் பாதை அமைத்துக் கொள்வான்

## ஈ. சிந்தனை வினா

**1. எவற்றுக்குப் புதிய கண்டுபிடிப்புகள் தேவை என்பது பற்றிச் சிந்தித்து எழுதுக**

ஒருவர் நினைப்பதை மற்றொருவர் அறியும் படி செய்யும் கருவிகள் உருவாக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் வருகின்றன. அந்தக் கருவி புழக்கத்திற்கு வந்து விட்டால் மனிதர்கள் அச்சத்தோடு தான் அடுத்தவர்களிடம் பேச நேரிடும், பொய் பேசமாட்டார்கள்.

RAMS

மூளை மாற்று அறுவை சிகிச்சை எளிமையாக்கப்பட வழி முறை காண வேண்டும்.

**2. இதுவரை எத்தனை கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன? அவை யாவை?**

இதுவரை எட்டு கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சூரியனுக்கு அருகில் இருக்கும் கோள் தொடங்கித் தொலைவில் உள்ள கோள் வரை முறையே தரப்படுகின்றன. புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன்,(.1781 இல் கண்டுபிடிக்கப்பட்டது.

**3. இந்தியா அண்மையில் நிலவுக்கு அனுப்பிய செயற்கைக்கோள் யாது?**

இந்தியா அண்மையில் நிலவுக்கு அனுப்பிய செயற்கைக்கோள் சந்திராயன்.

## கணியனின் நண்பன்

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. நுட்பமாகச் சிந்தித்து அறிவது ________________.

அ) நூலறிவு **ஆ) நுண்ணறிவு** இ) சிற்றறிவு ஈ) பட்டறிவு

2. தானே இயங்கும் இயந்திரம் ______________.

அ) கணினி **ஆ) தானியங்கி** இ) அலைபேசி ஈ) தொலைக்காட்சி

3. நின்றிருந்த என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது________

அ) நின் + றிருந்த **ஆ) நின்று + இருந்த**

இ) நின்றி + இருந்த ஈ) நின்றி + ருந்த

AAMSKOSAVAI.V

4. அவ்வுருவம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது________

அ) அவ்வு + ருவம் **ஆ) அ + உருவம்**

இ) அவ் + வுருவம் ஈ) அ + வுருவம்

5. மருத்துவம் + துறை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது________

அ) மருத்துவம்துறை ஆ) மருத்துவதுறை

இ) மருந்துதுறை **ஈ) மருத்துவத்துறை**

6. செயல் + இழக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது__________

**அ) செயலிழக்க** ஆ) செயல்இழக்க

இ) செயஇழக்க ஈ) செயலிலக

7. நீக்குதல் என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ------------

அ) போக்குதல் ஆ) தள்ளுதல்

இ) அழித்தல் **ஈ) சேர்த்தல்**

8. எளிது என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ------------

**அ) அரிது** ஆ) சிறிது இ) பெரிது ஈ) வறிது

**ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மனிதன் தன் வேலைகளை எளிதாக்கக் கண்டுபிடித்தவை **எந்திரங்கள்.**

2. தானியங்கிகளுக்கும், எந்திரமனிதர்களுக்கும் இடையே உள்ள முக்கிய வேறுபாடு **செயற்கை நுண்ணறிவு.**

3. உலக சதுரங்க வீரரை வெற்றிகொண்ட மீத்திறன் கணினியின் பெயர் **டீப்புளூ.**

4. 'சோபியா' ரோபோவுக்கு குடியுரிமை வழங்கிய நாடு **சவுதி அரேபியா.**

AAMSKOSAVAPATTY

## இ.சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. தொழிற்சாலை –இந்தியாவில் அதிகமான **தொழிற்சாலைகள்** உள்ளன.

2. உற்பத்தி –உணவு **உற்பத்தியில்** இந்தியா முதலிடம் வகிக்கிறது

3. ஆய்வு –**ஆய்வு** செய்வதில் ரோபோக்கள் முதன்மை பங்காற்றுகின்றன.

4. செயற்கை –**செயற்கைதான்** வாழ்க்கை மாற்றத்தை உருவாக்கும்

5. நுண்ணறிவு- **நுண்ணறிவின்** மூலம் மிகச் சிறப்பாக செயல்படலாம்.

## ஈ.குறுவினா

**1. ரோபோ என்னும் சொல் எவ்வாறு உருவானது?**

கார்ல் கபெக் என்பவர் செக் நாட்டைச் சேர்ந்த நாடக ஆசிரியர். இவர் 1920 ஆம் ஆண்டு நாடகம் ஒன்றை எழுதினார்.

அதில் "ரோபோ" என்னும் சொல்லை முதல் முதலாய்ப் பயன்படுத்தினார் ஒரு தொழிற்சாலையில் ரோபோக்கள் வேலை செய்வதாய் அந்த நாடகத்தில் காட்சிகள் அமைத்திருந்தார். ரோபோ என்னும் சொல்லுக்கு 'அடிமை ' என்பது பொருள்.

**2. 'டீப் புளூ' – மீத்திறன் கணினி பற்றி எழுதுக.**

மீத்திறன் கணினிக்குள் சில கட்டளைகள் வடிவமைத்து வைக்கப்பட்டுள்ளன. அந்தச் செயற்கை அறிவைக் கொண்டே அது இயங்குகிறது.

1997 ஆம் ஆண்டு மே மாதம் சதுரங்கப் போட்டி ஒன்று நடைபெற்றது. அதில் உலகச் சதுரங்க வெற்றியாளர் கேரிகேஸ்புரோவ் கலந்து கொண்டார்.

MG VIJAYAPATHY

ஐ. பி எம் என்னும் நிறுவனம் உருவாக்கிய டீப்புளு என்னும் மீத்திறன் கணினி போட்டியிட்டு வெற்றி பெற்றது.

## உ.சிறுவினா

**1. எந்திரமனிதனின் பயன்களை விளக்குக.**

மருத்துவத்துறையில் நோயின் அறிகுறிகளைக் கண்டு பிடிக்கவும், மருத்துவம் பார்க்கவும், சிக்கலான அறுவைச் சிகிச்சை செய்யவும் எந்திர மனிதன் பயன்படுகிறான். எந்திர மனிதன் பேசுவான், பாடுவான் வீட்டுவேலை செய்வான்,படிப்பதில் உதவுவான் அலுவலக வேலைகளைச் செய்து தருவான்.

எந்திர மனிதன் உணவகங்களில் உணவு பரிமாறும் பணி செய்கிறான், பொது இடங்களில் வழிகாட்டுகிறான். வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்வான், மனிதர்களுடன் விளையாடவும் எந்திர மனிதனைப் பயன்படுத்தலாம்.

**2. துருவப் பகுதிகளில் ஆய்வு செய்ய எந்திரமனிதர்களை அனுப்புவதன் காரணம் யாது?**

துருவப் பகுதியின் வெப்பநிலை உறைநிலைக்கும் கீழே உள்ளது. அப்பகுதிகளுக்கு மனிதன் சென்று ஆய்வு நடத்துதல் மிகக்கடினம் எனவே அப்பகுதிகளில் ஆய்வு செய்ய எந்திர மனிதன் அனுப்பப்படுகிறான்.

AHK TV

## ஊ. சிந்தனை வினா

**1. உங்களுக்கென ஒரு எந்திரமனிதன் இருந்தால் அதை எதற்கெல்லாம் பயன்படுத்துவீர்கள் எனச் சிந்தித்து எழுதுக.**

எனக்கென ஓர் எந்திர மனிதன் இருந்தால், அவனை என் கல்வி முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துவேன்.

நான் வீட்டுப் பாடங்கள் செய்வதிலும், இலக்கியம் கற்பதிலும் எந்திர மனிதனின் துணையை நாடுவேன். ஒவ்வொரு நாளும் அவனோடு சதுரங்கம் விளையாடி மகிழ்வேன்.

வீட்டுத் தோட்ட வேலைகளுக்கும் அவனைப் பயன்படுத்திக் கொள்வேன். எனக்கு உடல் நலக்குறைவு ஏற்படும் போது மருத்துவமனைக்குச் செல்லவும், எனது உடல் நலம் சீராகவும் அவனது திறனைப் பயன்படுத்துவேன்.

## ஒளி பிறந்தது

**அ. வினா விடை.**

**1. சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகளாக அப்துல் கலாம் எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

சுதந்திர இந்தியாவின் வெற்றிகள் :

1. உணவு உற்பத்தியில் தன்னிறைவு
2. தகவல் தொழில்நுட்பத் துறையில் மிகுதியான வளர்ச்சி
3. எவ்வகையான செயற்கைக்கோளையும் ஏவும் திறன்.
4. அணு உலைகள் மூலம் மின்சாரம் தயாரிப்பதில் முன்னணி. நவீன மருந்துகளும் பாரம்பரிய மருத்துவ முறைகளும் வளர்ச்சி.

AAMS KOSAVAI

5. பாதுகாப்புத் துறையைப் பொறுத்தவரை 'அக்னி' மற்றும் பிரித்வி' ஏவுகணைகளைச் செலுத்துவதில் வெற்றி. இவையெல்லாம் சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகளாக அப்துல்கலாம் குறிப்பிடுகிறார்.

**2. தமக்குப் பெருமகிழ்வை அளித்ததாக அப்துல் கலாம் குறிப்பிடும் நிகழ்வு யாது?**

தமக்குப் பெருமகிழ்வை அளித்ததாக அப்துல் கலாம் குறிப்பிடும் நிகழ்வு:

'போலியோவினால் பாதிக்கப்பட்டவர்கள் மூன்று கிலோ எடையுள்ள செயற்கைக் கால்களைப் பொருத்திக்கொண்டு சிரமப்பட்டு நடப்பதைக் கண்டேன். பாதுகாப்புக் கருவிகளில் பயன்படுத்தப்படும் 'கார்பன் இழையைக் கொண்டு முந்நூறு கிராம் எடையில் செயற்கைக் கால்கள் உருவாக்கப்பட்டன. அதனை அவர்கள் அணிந்து மகிழ்ந்த நிகழ்ச்சிதான் தனக்குப் பெருமகிழ்வை அளித்ததாகக் கலாம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## ஆ. சிந்தனை வினா

**1. நீங்கள் அப்துல் கலாமிடம் கேட்க விரும்பும் வினாக்களை ஒரு கடிதமாக எழுதுக.**

**இடம் : திண்டுக்கல்**

**நாள் : 18-11-2020**

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம், நான் திண்டுக்கல் அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு படித்து வருகிறேன். உங்களைப் போல அறிவியல் விஞ்ஞானியாக வேண்டும் என்பதே என்னுடைய ஆசை, கனவு, விருப்பம் உங்களிடம் பல

விஷயங்களைக் கற்றுக் கொள்ள நினைக்கிறேன். அதற்காக உங்களிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். எனவே அதற்குத் தாங்கள் பதில் அளிக்குமாறு மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கேள்விகள்:

நீங்கள் சிறு வயதில் விஞ்ஞானியாக வருவேன் என்று நினைத்துப் பார்த்ததுண்டா?

உங்கள் ஆராய்ச்சியில் உங்களைக் கவர்ந்தது எது?

ஒரு சிறந்த குடிமகன் எப்படி இருக்க வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

நம்முடைய விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கும் தொழில் நுட்பங்கள் விவசாயத்திற்கு எந்த அளவு பயன்படுகிறது?

நாட்டின் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டாம் ஒழிய வழி சொல்லுங்கள்?

## மொழி முதல், இறுதி எழுத்துகள்

### அ. வினா விடை

**1. மொழி முதலில் வரும் உயிர்மெய் எழுத்துகள் யாவை?**

(i) க,ச,த,ந,ப,ம ஆகிய வரிசைகளில் உள்ள எல்லா உயிர்மெய் எழுத்துகள்.

(ii) ங, ஞ, ய, வ ஆகிய உயிர்மெய் எழுத்து வரிசைகளில் சில எழுத்துகள் மட்டும். 'ங' வரிசையில் 'ங' என்னும் ஓர் எழுத்து மட்டும். வரிசையில் ஞ, ஞா, ஞெ,ஞொ ஆகிய நான்கு எழுத்துகள்.

AAMSKOSAVAPATTY

'ய' வரிசையில் ய, யா, யு, யூ, யோ, யௌ ஆகிய ஆறு எழுத்துகள்.
'வ' வரிசையில் வ, வா, வி, வீ, வெ, வே, வை ஆகிய ஏழு எழுத்துகள்.

**2. மொழி இறுதியில் வராத மெய்கள் என்னென்ன?**

க், ங், ச், ட், த், ப், ற் ஆகிய ஏழு மெய் எழுத்துகளும் சொல்லின் இறுதியில் வருவதில்லை.

**3. சொல்லின் இடையில் மட்டுமே வரும் எழுத்து எது?**

ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.

**அ. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

அது 1921 ஆம் ஆண்டு. மத்திய தரைக் கடலில், ஒரு கப்பல் இங்கிலாந்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. தமிழர் ஒருவர் கப்பலின் மேல்தளத்தில் நின்று கடல் அலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென அவரது உள்ளத்தில் கடல்நீர் ஏன் நீலநிறமாகக் காட்சியளிக்கிறது என்ற வினா எழுந்தது. அவ்வினா அவரை உறங்க விடவில்லை. இங்கிலாந்து பயணம் முடிந்து இந்தியா திரும்பினார். பிறகு பாதரச ஆவி விளக்கு, பென்சீன் மற்றும் நிறமாலைக் காட்டி ஆகியவற்றின் உதவியுடன் தமது ஆய்வைத் தொடங்கினார். ஆய்வின் முடிவில் 1928 பிப்ரவரி 28 ஆம் நாள் "இராமன் விளைவு" என்னும் தமது கண்டுபிடிப்பை வெளியிட்டார். இக்கண்டுபிடிப்பு இந்தியாவிற்கு அறிவியலுக்கான முதல் நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது. அவர் தமது கண்டுபிடிப்பை வெளியிட்ட பிப்ரவரி 28 ஆம் நாளை நாம் ஆண்டு தோறும் "தேசிய அறிவியல் நாள்" எனக் கொண்டாடி மகிழ்கிறோம். அவர் யார் தெரியுமா? அவர்தான் சர். சி. வி. இராமன்.

1. இராமன் விளைவைக் கண்டறிந்தவர் யார்? **சர்.சி.வி.ராமன்.**

2. இராமன் அவர்களுக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்த கேள்வி எது?

AAMSKOSAVAPATTY

அ) கடல்நீர் ஏன் கறுப்பாகக் காட்சியளிக்கிறது?

ஆ) கடல்நீர் ஏன் நீல நிறமாக இல்லை?

**இ) கடல்நீர் ஏன் நீல நிறமாகக் காட்சியளிக்கிறது?**

ஈ) கடல்நீர் ஏன் உப்பாக இருக்கிறது?

3. தேசிய அறிவியல் நாள் என்றைக்குக் கொண்டாடப்படுகிறது ? ஏன்?

**பிப்ரவரி-28**

4. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பிடுக.

**இராமன் விளைவு**

**ஆ. சொல்வளம் பெருக்குக. பின்வரும் தொடர்களில் அடிக்கோடிட்ட சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.**

1. **கம்ப்யூட்டர்** துறையில் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். **கணினி**

2. **காலிங்பெல்லை** அழுத்தினான் கணியன். **அழைப்புமணி**

3. மனிதர்கள் தங்கள் வேலைகளை எளிதாக்க **மிஷின்** களைக் கண்டுபிடித்தனர். **எந்திரம்**

4. இன்று பல்வேறு துறைகளிலும் **ரோபோ** பயன்பாட்டிற்கு வந்துள்ளது. **எந்திரமனிதன்**

**இ. கலைந்துள்ள எழுத்துகளை முறைப்படுத்துக.**

1. விகண்லம் - விண்கலம்

2. மத்ருதும்வ - மருத்துவம்

3. அவிறில்ய - அறிவியல்

AAMS KOSAVAPATTY

4. ணினிக - கணினி

5. எலால்ம் - எல்லாம்

6. அப்ழைபு - அழைப்பு

**வட்டத்தில் சிக்கிய எழுத்துகளை எடுத்து எழுதுக. எழுத்துகளை வரிசைப்படுத்தி தமிழக அறிவியல் அறிஞரைக் கண்டுபிடியுங்கள்.**

அப்துல்கலாம்.

**ஈ. வாக்கியத்தை நீட்டி எழுதுக.**

(எ.கா) நான் படிப்பேன். (அறிவியல், பாடம், நன்றாக)

நான் பாடம் படிப்பேன்.

நான் அறிவியல் பாடம் படிப்பேன்.

நான் அறிவியல் பாடம் நன்றாகப் படிப்பேன்.

**1. அறிந்து கொள்ள விரும்பு. (எதையும், காரணத்துடன், தெளிவாக)**

எதையும் அறிந்து கொள்ள விரும்பு.

எதையும் காரணத்துடன் அறிந்து கொள்ள விரும்பு.

எதையும் காரணத்துடன் தெளிவாக அறிந்து கொள்ள விரும்பு.

**2. நான் சென்றேன். (ஊருக்கு, நேற்று, பேருந்தில்)**

**நான் சென்றேன்**

நான் ஊருக்கு சென்றேன்

நான் நேற்று ஊருக்கு சென்றேன்

AAMS KOSAVAPATTY

நான் நேற்று ஊருக்கு பேருந்தில் சென்றேன்

**உ. அடிச்சொல்லுடன் எழுத்துகளைச் சேர்த்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

(எ.கா) அறி - அறிக, அறிந்து, அறிஞர், அறிவியல், அறிவிப்பு


1. பார் – **பார்க்க , பார்த்து**

2. செய் – **செய்க ,செய்து, செய்வாய்**

3. தெளி – **தெளிவு, தெளிவாக, தெளிந்து**

4. படி – **படிக்க, படித்து, படியில், படிவம்**

**ஊ. மெய் எழுத்து நடுவில் அமையுமாறு சொற்களை உருவாக்கு.**




**(எ.கா) கம்பு வம்பு, நம்பு, தம்பி ,கம்பி, நம்பி**